UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
RECEIVED
5-7-1984

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆனி 21 ஷவ்வால் 5 இதழ் 141
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 5-7-84

## சபையில் நடந்த சர்ச்சை: 5நிமிடம் ஒத்திவைப்பு!

### ‘சொல்லம்புகள்’ தாராளமாக ‘வீச’ப்பட்டன

(சபையிலிருந்து இ. கந்தசாமி)

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்காவுக்கும் கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. வீரசிங்கமல்லிமாராச்சிக்குமிடையே நேற்று சபையில் ஏற்பட்ட சர்ச்சையின் எதிரொலியாக ஐந்து நிமிடங்களுக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது.

சபைக்கூட்டத்துக்குதலைமை வகித்த உப சபாநாயகரினல் சர்ச்சையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே சபைக் கூட்டம் ஒத்திவைக் கப் பட் டது.

திரு. அநுராவும் திரு. மல்லிமாராய்ச்சியும் ஒருவரை ஒருவர் கைநீட்டிக்கொண்டுதகாத வார்த்தைகளினல் சொல்லம்புகளை வீசினர்கள்.

ஒரு கட்டத்தில் உப சபாநாயகர்; தயவு செய்து உங்கள் ‘யுத்த’த்தை நிறுத்துங்கள் என்று கோரியபோதும் ‘வாய்ச் சண்டை’ நிற்கவில்லை.

# சர்வகட்சி மகாநாடு: இன்று அமைச்சரவை முடிவுசெய்யும்

(கொழும்பு)

**இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான சர்வகட்சி மகாநாட்டை மீண்டும் எப்பொழுது கூட்டுவது என்பது குறித்து இன்று நடைறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.**

வழக்கமான வாராந்த அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெறுவதாக இருந்தபோதிலும்; ஜனதிபதி, பிரதமர் மற்றும்அமைச்சர்கள் அநுராதபுரம் ‘கிராம எழுச்சி’த் திட்ட வைபவங்களுக்குச் சென்றிருந்ததால் இன்றுவியாழக்கிழமைக்கு அமைச்சரவைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

சர்வகட்சி மகாநாட்டைத் தாமதமின்றிக் கூட்டி சுமுகமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுவதால், அடுத்த வாரமே மாநாடு கூட்டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதே நேரத்தில் இந்தியாவில் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கும், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்குமிடையே நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுக்கள் மற்றும் ஜனதிபதியின்அமெரிக்க, பிரிட்டன் விஜயம் குறித்தும் இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவிக்கப்படும்.

அமைச்சரவை இன்று மாலை நான்கு மணிக்குக் கூடும்.

## விபத்தில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பலி!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் அதிவேகமாகச் சென்ற உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் விபத்துக்குள்ளாகி மரணமானர்.

அராலி சந்தி வளைவில் இவ் விபத்து நிகழ்ந்தது.

சிலாபம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கந்தையா ரஞ்சன் (36 வயது) என்பவரே மரணமானவராவார். இவர் வட்டுக்கோட்டை கொட்டைக்காட்டைச் சேர்ந்தவர்.

அராலிக்கு நண்பரொருவருடன் நேற்றுமுன்தினம் மாலை ‘ஸ்கூட்டர்’ ஒன்றில்

(8ம் பக்கம் பார்க்க)

### கடல் கண்காணிப்பு வலயம்:
## ரூ. 16 கோடி செலவில் 3 கடற்படைக் கப்பல்கள்

(கொழும்பு)

கடல் கண்காணிப்பு வலயத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக மூன்று கடற்படைக் கப்பல்களை இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்யவகை செய்யும் உபமானியக் கோரிக்கை பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

16 கோடி 82 லட்சம் ரூபா பெறுமதியான இந்த உபமானியக் கோரிக்கையை பிரதமர் சார்பில் பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு வின்சன்ட் பெரேரா சமர்பித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

### கடற்படையை பலப்படுத்தும் முயற்சி
## காலம்கடந்த நடவடிக்கை!
### சபையில் ‘அநுரா’ கண்டனம்

(கொழும்பு)

‘‘கடற்படையை இப்பொழுது பலப்படுத்த அரசு எடுக்கும் முயற்சிகள் காலம் கடந்த நடவடிக்கைகள் ஆகும்’’ என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுராபண்டாரநாயக்கா நேற்று பாராளுமன்றத்தில் கூறினர்.

‘‘கடற்படையை எப்பொழுதோ பலப்படுத்தியிருக்க வேண்டும். 82, 83ம் ஆண்டு பட்ஜட்டில்கூட அதிக நிதி ஒதுக்காமல் இப்பொழுது நிதி ஒதுக்கப்படுவது சிரிப்புக்கிடமாக இருக்கிறது’’ என்று தெரிவித்த திரு. அநுரா பண்டாரநாயக்கா.

‘‘வெளியே இருந்தவர்கள் உள்ளே வந்துவிட்டார்கள். உள்ளே இருந்தவர்கள் வெளியே போய்விட்டார்கள். வெளியூர்களிலிருந்து ஆயுதங்களும் வந்துவிட்டன. இதன் பின்னர் தான் கடற்படையைப் பலப்படுத்த அரசு யோசிக்கிறது, இது காலம்கடந்த செயலாகும்’’ என்று குறை கூறினர்.

### மீண்டும் சிங்கப்பூர்செல்ல ஆயத்தமானபோது
## விதி அந்த இளைஞரை விடவில்லை!

(கரவெட்டி)

சிங்கப்பூரில் வேலை பார்த்துவிட்டு விடுமுறையில் ஊர் திரும்பியவர் மீண்டும் சிங்கப்பூர் பயணமாவதற்கு இரு நாட்களுக்குமுன்னர் விபத்தில் மரணமானர். இச்சம்பவம் மாலி சந்தியில் இடம்பெற்றது

புலோலியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவநாதன் (39 வயது) சிங்கப்பூர் பயணமாகு முன்னர் தமது தாயாரிடம் பிரியாவிடை பெற்றுவிட்டு, தனது மனைவி வீட்டுக்கு ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்தார். ஸ்கூட்டர், மாடு ஒன்று குறுக்கே வந்ததினல் திடீரென நிறுத்தப்பட்டது. என்றும் காலம் சென்றவர் தூக்கிவீசப்பட்டு ஆபத்தான நிலையில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானர் என்றும் தெரிவிக்கப்பட்டது. வடமராட்சி மரணவிசாரணை அதிகாரி எஸ். வைரமுத்து மரணவிசாரணை நடத்தி, விபத்து மரணம் எனத் தீர்ப்புவழங்கினர்.

### சத்துணவுஇல்லாமல்பிள்ளைகள் பரிதாபம்:
## சைவச்சிறுர் இல்லத்தின் அவல நிலை!!
### நல்லிதயம்கொண்டவர்கள் பொறுப்பேற்குமாறு கோரிக்கை!!!

(ஏ. வி. மாணிக்கம்)

திருநெல்வேலியிலுள்ள சைவச்சிறுர் இல்லம் ஓர் இக்கட்டான அவலநிலையில் இருப்பதாக இந்துபோட் தலைவரும், சைவச்சிறுர் இல்ல முகாமையாளருமான திரு. எஸ். ஆர், கனகநாயகம் கவலை தெரிவித்துள்ளார்.

சைவச்சிறுர் இல்லத்தில் தங்கியிருக்கும் 253 ஆண்-பெண்பிள்ளைகளைப் பராமரிக்க போதிய நிதிவசதி இல்லாததே அவல நிலைக்குக் காரணம் என்றும் திரு. கனகநாயகம் விளக்கம் கூறினர்.

இந்துபோட் இராசரத்தினம் நூற்றுண்டு விழாத் தொடர்பான ஆரம்பக் கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்படி கவலையூட்டும் தகவலைத் தெரிவித்தார்,

யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முன்னள் அதிபர் ஓறேற்றர் சி. சுப்பிரமணியம் தலைமையில் இககூட்டம் நேற்று நடைபெற்றது, கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் காலைப்பூசையும் ஆராதனைகளையும் தொடர்ந்து நண்பகல் விடுதி சைவச்சிறுர்களுட்பட ஆசாரமுறைப்படி மாகேசுர பூசை இந்துபோட் இராசரத்தினம் குடும்பத்தினரால் நடாத்தப்பட்டது.

திரு. கனகநாயகம் தமது

(8ம் பக்கம் பார்க்க)

## சபையில் 5 தடவைகள் மின்தடை!

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று ஐந்து தடவைகள் மின்சாரத்தடை ஏற்பட்டது.

நேற்றுமாலை 6-20க்கு முதலில் மின்தடை ஏற்பட்டது. பின்னர் நாற்பது நிமிடங்களில் நான்கு தடவைகள் அடுத்தடுத்து சபை, இருளில் மூழ்கி எழுந்தது

## யார் இவர்?

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் நடுத்தர வயது மதிக்கக்கூடிய ஒருவரின் சடலம் பொலிசாரால் நேற்றுக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இச்சடலம் யாழ் அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு, பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சிதைந்த நிலையில் காணப்படும் இச்சடலம், இன்னும் அடையாளம் காணப்படவில்லை. (க)

## சபையில்மன்னிப்பு கேட்டனர்

(கொழும்பு)

சபையில் வீசிய ‘சொல்லம்பு’களினல் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக, எதிர்க்கட்சித் தலைவரும் கொழும்பு மாவட்ட அமைச்சரும் நேற்று சபையில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர்.

பாராளுமன்றத்தில் தகாத வார்த்தைகளைப் பேசி பெரும் சர்ச்சையைக் கிளப்பியதற்காக சபையில் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று உபசபாநாயகர் தெரிவித்தபோது; சபை ஒத்திவைக்கப்படுவதற்கு முன்னர் தாம் மன்னிப்புக் கேட்டுவிட்டதாக திரு, அநுரா பண்டாரநாயகா கூறினர்.

‘‘மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்’’ என்று கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. [illegible] மல்லிமாராச்சி அப்போது கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பபாணம் கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியில் 2 பரப்புக் காணி சுற்று மதில் கிணறு ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பரன் ரேட்சென்ரர் 295, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
680

A30 அல்லது A35 விற்பனைக்குள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும். விம்பி கொம்பனி, NEW 375, Clock Tower Road, Jaffna. 686

பருத்தித்துறை கற்கோவளம் பிரதான வீதிக்கு அருகாமையில், கற்கோவளம் சந்தைக்கும் மெதடிஸ் மிசன் தமிழ்ப்பாடசாலைக்கும் எதிராக பன்னிரெண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் விற்கப்படும். தோ. செபமாலை (ஆசிரியர்) வோல்டன் பிளேஸ் தும்பளை, பருத்தித்துறை. 685

H 100 S Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. றவிச்சந்திரன் 308, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 662

7சிறீ தொடர் இலக்க 404 பேஜோகார் விற்பனைக்குண்டு. தொடர்பு அனிதா, Y.M.C.A கட்டடம் கச்சேரி சந்தி, சுண்டுக்குளி. 689

## தேவை

நல்ல நிலையிலுள்ள Volks Wagon 1300 தேவை. நிறத்தையும் விலையையும் குறித்து விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது. விளம்பர இல: 681 C/o ஈழநாடு யாழ்ப்பாணம்.
681

## தவறிவிட்டது

30-6-84 இல் சாவகச்சேரி சந்தையில் மு.ஐயாத்துரை ஐயர், கைதடி வடக்கு என்ற விலாசமிட்ட அடையாள அட்டை, லைசன்ஸ் ரக்ஸ் இன்சூரன்ஸ் தவறவிடப்பட்டது. கண்டவர்கள் தயவு செய்து மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 688

## முக்கிய அறிவித்தல்

1982ல் ஆசிரிய நியமனம் பெற்ற சங்கீத, நடன, ஆங்கில டிப்ளோமாபட்டம்பெற்ற ஆசிரியர்களை, சனிக்கிழமை 7ந். திகதி காலை 9-30 மணிக்கு கீழ்க்கண்ட விலாசத்தில் வந்து சந்திக்கும்படி கேட்கப்படுகின்றீர்கள்.

தகவல்

திருமதி வ.நடராஜா
செல்வி இ.சியாமளா
செல்வி அன்னபூரணி
முத்துக்குமாரன்
(சாந்தா)

இல: 411/2 கே.கே எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு
அருகாமை) 692

## இன்று 5வது நினைவு அஞ்சலி



அமரர்

### S. P குருசாமி

(பொலிஸ் இன்ஸ்பெக்டர்)
தோற்றம் 15-11-1922
மறைவு 01-07 1979

ஆத்மசாந்திக்கு இறைவனை இறைஞ்சும் மனைவி, ஆசைமகள், பேரப்பிள்ளைகள், ரமேஷ், பிரகாஷ், ஆகாஷ், பிரதிஷ், சபேஷ் மருமகன் 204, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம் யாழ்ப்பாணம்.
592

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலம் சென்ற கந்தவனம் சதாசிவம் கைம்பெண் செல்லாச்சியின் மரணசாதனம் நிறைவேற்றல் சம்பந்தமாக கந்தவனம் சதாசிவம் கனகசிங்கம் பொலிகண்டி

மனுதார்

மரணசாதனத் தத்துவ
நியாயாதிக்க
இல: 1194/ ரி
எதிர்

1. சதாசிவம் திருச்செல்வம் கைம்பெண் வதனி
2. திருச்செல்வம் றஜீவன், பராயமற்றவர் வயசு 2 இருவரும் நெல்லியடி கரவெட்டி

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர்குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஆனி மாதம் 18ந் திகதி காலை 9-30 மணிக்கு இந்த நீதிமன்றில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

மேலும் இவ்வழக்கைக் கொண்டு நடத்துவதற்காக பராயமற்ற 2ம் எதிர் மனுதாரின் பாதுகாவலராக 1ம் எதிர் மனுதார் நியமிக்கப்பட்டிருப்பதால் இந்த நியமனத்திற்கு ஏதாவது ஆட்சேபணையிருப்பின் குறித்த 18ந் திகதியன்று இந் நீதிமன்றில் வெளிப்பட்டு ஆட்சேபத்தை தெரிவிக்குமாறு 1ம் எதிர்மனுதார் வேண்டப்படுகிறுர்.

1984ம் ஆண்டு பங்குனி மாதம் 9ந் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி
றிச்சேட். ஜெயராசசிங்கம்
பதிவாளர்

வரைவு
சி:செல்லையா
மனுதாரின் சட்டத்தரணி
18-6-84

காரணம் காட்டும் திகதி 3-8-84க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

றிச்சேட் ஜெயராசசிங்கம்
பதிவாளர்
376

## Vacancies Office Peones

மேற்படி வெற்றிடங்களுக்கு யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி பிரதேசங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 7 - 7 - 1984 அன்று நேரில் வரவும்.

TAX AND ACCOUNTING SERVICES,
No: 37 PIRAPANKULAM LANE,
JAFFNA.
695

## லேடிஸ் & ஜென்ட்ஸ் ரெயிலர்

பெண்கள், குழந்தைகளுக்கென நவீன பாணியில் தைத்துக் கொடுப்பதற்கு ஒரு பெண் ரெயிலரை இம்மாதத்திலிருந்து நியமித்திருக்கிறேம். ஆண்களுக்காக ஒரு ஜென்ட்ஸ் ரெயிலரை சீக்கிரத்தில் நியமிக்கவுள்ளோம்.

யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
பருத்தித்துறை.
694

## எங்கள் இன்றைய வெளியீடு

★ சுரேஸ் ★ பானுப்பிரியா நடித்த
ஏதோ மோகம் – (V. G. P. ORIGINAL)
★ பாண்டியன் ★ ஊர்வசி நடித்த
நேரம் நல்ல நேரம் – (V. G. P.ORIGINAL)

ரசிகப் பெருமக்களே, ஆதரவாளர்களே இன்றே ரூ. 10/- மட்டும் செலுத்தி, ஒவ்வொரு பிரதிகளையும் பார்த்து மகிழுங்கள். உங்கள் பிரதிகளுக்கு இப்பொழுதே முந்துங்கள்

### குணம் வீடியோ சென்டர்

42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23665
(690)

## தொழிற்பயிற்சி

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நடாத்தும் வட்டு. தொண்டேயம் தொழிற் பயிற்சி நிலையத்தில் பின்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. மின் இயல் 6 மாதம்
2. வெல்டிங் 6 மாதம்
3. இயந்திர இயல் 6 மாதம்
4. தட்டெழுத்து 6 மாதம் (ஆங்கிலம்)
5. சுருக்கெழுத்து (ஆங்கிலம்) 1 வருடம்
6. SPOKEN ENGLISH
7. DIPLOMA IN BUILDING CONSTRUCTION
8. DIPLOMA. IN DRAUGHTMANSHIP

சனி, ஞாயிறு கிழமை நாட்களில் மாலைநேர வகுப்புகள்
மாதக் கட்டணம் ரூபா 30/–
COMPUTER வகுப்புகள் ஆரம்பமாகின்றன
கட்டணம் ரூபா 1200/–
உடன் தொடர்புகொள்ளவும்:

இயக்குநர்,
வட்டு. தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையம்,
சித்தன்கேணி. (679)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 28-10-1963



உதிர்வு: 16-7-1983

### செல்வன் இராசதுரை ஜெயானந் (ஆனந்)

அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்கும் இலக்கணமாகத் திகழ்ந்த எங்கள் அருமை மிகு ஆனந்தே! எம்மை ஆறுத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட அன்புத் தெய்வமே, நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு சென்றுலும் உங்களின் நினைவும் துயரும் எங்களைவிட்டு நீங்காது. உனது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை தினமும் பிரார்த்திக்கிறேம்.

அன்புமிகு ஐயா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், நண்பர்கள், உறவினர்கள்.

உடுவில் கிழக்கு,
சுன்னுகம். (669)

குரோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
(Cross International Telecommunication Services)

FOR ALL INTERNATIONAL AND LOCAL DIRECT DIALLING TELEPHONE CALLS.

INTERNATIONAL TELEX SERVICES :- NO DELAY AT ALL, CHEAP RATES, CONTACT US RIGHT NOW.

குரோஸ் சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.
(i) சர்வதேச, உள்ளூர் நேரடி தொலைத்தொடர்பு சேவை.
(ii) சர்வதேச ரெலெக்ஸ் சேவை.

உலகின் எப்பாகத்திற்கும் குறைந்த கட்டணத்தில் நேரடிச் சர்வதேச தொலைத்தொடர்பு சேவையும், ஒரு நொடிப்பொழுதில் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

CTS

Cross International Telecommunication Services
STAGE II, FIRST FLOOR, BUS STAND CENTRE ROAD,
MODEL MARKET, JAFFNA.
Phone No: 22040, 22065. Telex No: 22207 (C. T. S.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜம்மு-காஷ்மீரில்புதிய அரசு எதிர்க்கட்சிகள் கண்டனம்!

## பாரூக் அப்துல்லாவின் பலத்தை அறிந்திருக்க வேண்டுமாம்

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் புதிய அரசாங்கம் அமைக்க மாநில ஆளுனர் நடவடிக்கைஎடுத்ததைஇந்தியாவின் பல எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஜனுப் பாரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக்கட்சியிலிருந்து 12 உறுப்பினர்கள் வெளியேறியதும் மாநில அரசைக் கலைத்து விடுமாறு ஆளுனர் உத்தரவிட்டதைக் கண்டித்துள்ள இந்த எதிர்கட்சிகள் பாரூக் அப்துல்லாவின் பலத்தை அறிய சட்டசபையில் வாக்கெடுப்பு நடத்தியிருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து கண்டனம் தெரிவித்துள்ள தி. மு. க. தலைவர் திரு. மு. கருணநிதி, புதுச்சேரியில் தி.மு.க. அரசிலிருந்து இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியேறியதும் சட்டசபையைக் கலைத்துவிட்ட மத்திய அரசு, தி.மு.கவுக்கு போதிய பலம் இருந்தபோதிலும் அரசாங்கத்தை அமைக்குமாறு கோரவில்லை ஆனல் ஜம்மு காஷ்மீரில் புதிய அரசாங்கத்தை அமைக்க பலமுள்ள கட்சிக்கு அனுமதியளித்துள்ளது என்றூர்.

மேற்கு வங்காள சட்டசபை நேற்று நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில் ஜம்மு காஷ்மீர் ஆளுனரின் நடவடிக்கையை கண்டித்துள்ளது.

## பி. பி. ஸி. அலுவலகத்தின் முன் கம்யூனிஸ்ட் தொண்டர் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (பி. பி. ஸி) இந்திய எதிர்ப்புப் பிரசாரத்தைக் கண்டித்து அகில பாரத கம்யூனிஸ்ட் கட்சியினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

புதுடில்லியிலுள்ள பி.பி. ஸி அலுவலகத்துக்கு முன்ஞல் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான கட்சித்தொண்டர்கள் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக பி. பி. ஸி. தனது செய்திகளில் இந்தியாவுக்கு எதிரான செய்திகளை ஒலிபரப்பி வருவதாக இந்தியாவின் பல்வேறு அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

நேற்று முன்தினம் கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பல முக்கிய தலைவர்களும் கலந்து கொண்டனர்.

## சவூதி பொலிஸ் அதிகாரி லண்டன் கடையில் திருடினர்!

### குற்றத்தை ஒப்புக்கொண்டவ்ருக்கு அபராதம்

லண்டன் ஜூலை 4. சவூதி அரேபியாவின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கடையொன்றிலிருந்து பொருட்களை திருடியபோது கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

இவரைக் கைதுசெய்த லண்டன் பொலிசார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

49 வயதான ஜனுப் பரீட் என்ற இந்த உயர் பொலிஸ் அதிகாரி 53 ஸ்ரேலிங் பவுண் பெறுமதியுள்ள மூன்று பிஜாமா சாரங்களை திருடிய போதே கையும் மெய்யுமாக பிடிபட்டார்.

குற்றத்தை ஒப்புக்கொண்ட இவருக்கு 1500 ஸ்ரேலிங் பவுண் அபராதம் விதிக்கப்பட்டது.

## கனடா பிரஜைகைது

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் ஜலந்தர் நகரில் வெடிமருந்து. துப்பாக்கி போன்ற ஆயுதங்களுடன் கனடாப்பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கும் பஞ்சாப் சீக்கியத் தீவிரவாதிகளுக்குமிடையே நெருங்கிய தொடர்பிருப்பதாக தெரியவந்திருக்கிறது.

இதேவேளை பஞ்சாப் பொற்கோயில் வளாகத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின் போது 73 பயங்கரவாதிகளும், இராணுவத்தை விட்டுவிலகிச் சென்ற 4 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் பெருந்தொகையான வெடிமருந்துகளும், கைக்குண்டுகளும் அங்கு கைப்பற்றப்பட்டுள்ளன.

## "பஸ்பிரயாணத்தில் கிடைத்த தகவல்கள் நூல் வெளிவர உதவியது"

### "மட்டக்களப்பு சைவக்கோவில்கள்" வெளியீட்டுவிழாவில் நூலாசிரியர்

(மட்டக்களப்பு)

"மட்டக்களப்பு சைவக் கோவில்களின் வரலாற்றுச் சிறப்புகளை உள்ளடக்கிய நூல் வெளிவருவதற்கான ஏற்பாடுகளை 10 வருடங்களாக மேற்கொண்டுவந்தேன். இன்று அம்முயற்சி பிரதேச அபிவிருத்தி அமைச்சின் உதவியிஞல் வெற்றிபெற்றுள்ளது"

இவ்வாறு "மட்டக்களப்பு சைவக்கோவில்கள்', என்னும் நூலை எழுதிய நூலாசிரியர் வித்துவான் பண்டிதர் வீ. சீ. கந்தையா தனது அறிமுகவுரையில் குறிப்பிட்டார்.

இந்நூல் வெளியீட்டுவிழா பிரதேச அபிவிருத்திஅமைச்சின் அனுசரனையுடன் ஆனைப்பந்திபெண்கள் பாடசாலை மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனிமுத்து தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நூலாசிரியர் சுகயீனமுற்றிருந்ததால் அறிமுகவுரையை நூலாசிரியரின் பாரியார் திருமதி. கங்கேஸ்வரி கந்தையா வாசித்தார்.

அவர் தொடர்ந்து தனது அறிமுகவுரையில் குறிப்பிட்டதாவது: "நான் பட்டிருப்பு மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமைபுரிந்த போது பஸ்பிரயாணத்தில் கிடைத்த தகவல்கள் இந்நூல் வெளியீடுசெய்வதற்கு அத்திவாரமாக அமைந்தது.

"இந்நூல் நான் எழுதும் பணியில் ஈடுபட்டிருக்கின்ற வேளையில் அமைச்சர் இராசதுரை என்னைச் சந்தித்து அமைச்சுமூலம் நிதிவழங்கி ஊக்குவித்து இன்று நூலாக மலரத் துணைபுரிந்தார்.

"கடந்தவருடம் வெளிவர வேண்டிய இந்நூல் அந்நேரம் ஏற்பட்ட இனக்கலவரத்தால் வெளியிடுவதில் தடங்கல் ஏற்பட்டது எனது முதல் அச்சு நூல் பலதடைகள், தடங்கள் மத்தியில்தான் இறுதியில் வெளிவந்தது. அதாவது அந்நேரம் அமைச்சருக்கு சொந்தமான அச்சகத்தில் அச்சில் இருந்தபோது அன்றைய சூழ்நிலையில் அச்சகம் சீல்வைக்கப்பட்டதாகும் என்றூர்."

அமைச்சர் இராசதுரையிடமிருந்து முதற்பிரதியை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. கு. பாலகிட்னர் முதல்நூலைப்

(7ம் பக்கம் பார்க்க)

## மே. இந்தியஅணி வெற்றி

(லண்டன்)

இங்கிலாந்துக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்குமிடையே நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியிலும் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது இனிங்ஸில் மேற்கிந்திய அணியினர் ஒரு விக்கட்டை மட்டும் இழந்து 344 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம் ஒன்பது விக்கட்டுகளால் இந்த வெற்றியை பெற்றது.

ஸ்கோர் விபரம்: இங்கிலாந்து 286, 9/300, மே. இந்தியத்தீவு 245, 1/344.

## புனைபெயரில் எழுத்தடை

### பத்திரிகையாளர்சங்கம் கண்டனம்!

(யாழ்ப்பாணம்)

புனைபெயரில் எழுதுவதை தடைசெய்யும் வகையில் பத்திரிகைப்பேரவை சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அரசாங்கம் முடிவு செய்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதென்று வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதனை வாபஸ்பெறுமாறு அரசிடம் வேண்டுகோள் விடுப்பதென்றும் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சங்கத்தின் நிர்வாகசபைக் கூட்டம் தலைவர் திரு. எஸ். எஸ். குஹநாதன் தலைமையில் நடைபெற்றபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

இலங்கை பத்திரிகைப் பேரவை சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவருவதென்று அரசின் முடிவு பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தைப் பாதிப்பதஞல் அதனை எதிர்ப்பதென்றும் இதனை வாபஸ் பெறுமாறு ஜனதிபதி, ராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு வேண்டுகோள்விடுப்பதென்றும் இச்சங்கம் தீர்மானிக்கின்றது.

அரசின் இந்தமுடிவை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் கண்டித்துள்ளதையும் இதுதொடர்பாக எடுத்து வரும் முயற்சிகளையும் சங்கம் பாராட்டுகிறது.

'பத்திரிகையாளரின்' சஞ்சிகையை தொடர்ந்து வெளியிடவேண்டும் என்று சங்கம் தீர்மானிக்கிறது.

## இன்று

(திருநெல்வேலி)

திருநெல்வேலி காயாரோஹணேஸ்வரருக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் மண்டலாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது. பகல் சங்காபிஷேகமும் நடைபெறும், மாலை சிவபெருமான் உமாதேவி சகிதம் பூந்தண்டிகையில் எழுந்தருளுவார்கள். விசேட [illegible] நடைபெறும்.


**ரஸ்ற் ரவல் சேர்விஸ்**

11/A, மொம்சாக் கட்டிடம்
(விவேகானந்தா அச்சகம் முன்பாக)
ஸ்ரான்லிவீதி, யாழ்நகர்.
T. P. 24111

உலகின் எப்பகுதிக்கும் குறைந்த செலவில் விமான டிக்கட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம்-

* டென்மார்க் செல்வதற்கு —
(விசாவுடன் 22750/- இருவழிப் பயணம்)
* பிரயாணிகள் காசோலைகள்
குறைந்த செலவில் செய்துதரப்படும்
* Passenger Sales Agent for
AERO FLOT



குறைந்த விலையிலான
**சிறந்த நூல்கள்**

விஞ்ஞானம் — இலக்கியம்
★ அரசியல் ★ மருத்துவம் ★ பொறியியல்
மற்றும்
சிறுவர் நூல்கள்

இத்துறைகளில் இவை போன்று இன்னும் பல சிறந்த நூல்கள்
தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் உண்டு.

சிறுவர்களுக்கு :-
சிறப்பான பல வர்ணப்படங்கள் கொண்ட புத்தகங்கள் உண்டு.
பரிசளிப்பிற்கு மிக உகந்தவை.
மலிவான விலையில் பெறலாம்.

கிடைக்கும் இடம் :
**மக்கள் பிரசுராலயம் லிமிட்.**
**புத்தகசாலை,**
40, சிவன் கோவில் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்

7-7-84 சனிக்கிழமை 9-00–6-00 மணிவரை
பண்டத்தரிப்பு பலநோக்கு கூ. ச. மின்தறி நிலையத்தில்
கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

எதுவாழ்கிறதோ அது சத்தியம் சத்தியம் ஒரு, போதும்மடிவதில்லை. எது வெல்கிறதோ அதுசத்தியம், சத்தியம் ஒரு போதும் தோற்பதில்லை.

— ஸ்ரீ ஓங்கார்ஜி

# நமது நோக்கு

## தாராளமும் கட்டுப்பாடும்

காந்தியத்தில் ஊறித் திளைத்தவரான மூதறிஞர் ராஜாஜி அவர்கள் தமிழ் நாட்டில் மதுவிலக்கை அறிமுகப்படுத்திய போது, அறிஞர் அண்ணா அவர்கள் அரசியல் மட்டத்தில் அவருக்கு நேர் எதிரியாய் இருந்த போதிலும் மதுவிலக்குக் கொள்கையை மிக வேகமாக ஆதரித்துப் பிரசாரம் செய்தார். அண்ணா அவர்கள் எழுதிய நல்லதம்பி திரைப்படத்தில் இந்திர தர்பார் நகைச்சுவைக்காட்சியொன்று மதுவிலக்குப் பிரசாரத்துக்கென்றே புகுத்தப்பட்டிருந்தது.

பூலோகத்தில் மதுவை ஒழித்துவிட்டார்கள் என்பதைதேவலோகத்தில்விளக்குவதற்காக ஒரு நரனையும் மனைவியையும் இந்திர தர்பாருக்கு அழைத்து வருகிறார் நாரதர்.

''பூலோகத்தில் மதுவை ஒழித்துவிட்டார்களா? ஆச்சரியமாய் இருக்கிறது! நரனே! முன்னொருகாலத்தில் அமெரிக்கா வென்னும் தேசத்தில் மதுஒழிப்பு பெயிலியர் (தோல்வி) ஆகிவிடவில்லையா?' என்று கேட்கிறான் இந்திரன்.

''எங்கள் நாட்டில் அப்படி நடக்காது, ஏனென்றால் குடிப்பதை பாவம் என்று நினைக்கும் நாடு, குடித்தேன் என்று சொல்ல வெட்கப்படும் நாடு'' என்று விளக்கம் அளிக்கிறான் நரன்.

இவ்வாறு மதுவை ஒழிப்பதற்கு ஆதரவாக இருந்ததோடு மட்டுமின்றி தமிழ் நாட்டில் தாம் முதல் அமைச்சராகப் பதவிக்கு வந்த பிறகும் அக்கொள்கையை மாற்றாமல் தொடர்ந்து காப்பாற்றினார் அண்ணா. ஆனால் அவருக்குப்பின்னர் பதவிக்கு வந்த தம்பிமார் அக்கொள்கையை முற்றாவே மாற்றி மீண்டும் மதுபாவனைக்கு அனுமதியளித்து விட்டார்கள்.

நாட்டின் அபிவிருத்திக்கு தேவையான வருமானம் மதுபாவனையால் கிடைக்கிறதாம்! மதுமக்கள் மனங்களை மட்டுமல்ல தார்மீக வாழ்க்கை முறையையே கெடுத்து குடும்பங்களைச் சீரழித்து விடுகின்றது என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை.

தாராள இறக்குமதி, திறந்த பொருளாதாரம் வெளிசெலாவணி வருவாய் என்பவை யெல்லாம் கூட இவ்வாறு சமுதாய நலன்களை வெவ்வேறு விதமாகப் பாதித்து தீங்கிழைப்பதை அரசியலார் உணர்வதில்லை. கட்டுப்பாடற்ற பொருளாதார முயற்சிகள்-குறிப்பாக இறக்குமதி வர்த்தகம் உள்நாட்டுத் தொழில்களை சீரழித்து வருவதை கண்கூடாகப் பார்க்கிறோம்.

இலங்கையில் வெளிநாட்டுப் பொருட்கள் அளவுக்கு மீறிக் கொண்டுவந்து குவிக்கப்படுவதின்மூலம் உள்நாட்டுத் தொழில்கள் பாரதூரமாகப் பாதிக்கப்படுகின்றனவென்று கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு. சிறில் மத்தியுவே கவலைப்படுகிறார். அண்மையில் கொழும்பு லையனல் வென்ட் தியேட்டரில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய அவர், அமெரிக்கா, ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகள் கூட வெளிநாட்டுப்பொருள் இறக்குமதியைக் கட்டுப்படுத்தியுள்ளன. திறந்த பொருளாதாரம் என்பது உள்ளூர் கைத்தொழில்களை அழித்தொழிக்கும்சாவுமணியாக ஒலிக்கின்றது என்று சாடியுள்ளார். இக்கொள்கையை எதிர்தரப்பினர் தான் இவ்வளவுகாலமும் எதிர்த்துவந்தார்கள்.

இப்போது அமைச்சர் ஒருவரே எதிர்த்திருப்பதானது அரசு இதுபற்றி புனர் ஆலோசனை செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்துகின்றது.

இதேபோன்று, ஏராளமாக வெளிச்செலாவணி கிடைக்கின்றது என்பதற்காக உல்லாசப் பயணிகளைக் கட்டுப்பாடற்ற முறையில் தாராளமாக நாட்டுக்குள் வரவிட்டதின் பலனாக இன்றைய பள்ளி மாணவர்களும்கூட எல்.எஸ் டி. மார்ஜுவானா, கஞ்சா, அபின் மற்றும் போதை தரும் ஊசிமருந்துகளையெல்லாம் பாவிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள் என்ற கவலை மேலிட்டுள்ளது.

விலை மதிக்கமுடியாத தேசிய சொத்தான வருங்கால இளைஞர் சமுதாயம் போதைப் பொருள்களுக்கு அடிமையாகும் நிலை உருவாக்கப்பட்டு விட்டது பெரும் துரதிருஷ்டமாகும்.

அமெரிக்காவில் குடிப்பழக்கம் சிறுவயதிலிருந்தே ஏற்பட்டுவிடுகிறதாம். இளைஞர்கள் இளவயதிலேயே இவ்வாறு தம்மை அழித்துக்கொள்வதிலிருந்து தடுப்பதற்காக ஒரு குறிப்பிட்ட வயதடைந்த பிறகே மது அருந்த அனுமதிக்கவேண்டும் என்ற வகையில் ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதுபற்றி ஜனாதிபதி றீகன்ஆலோசித்துவருகிறார்.

தனிமனித சுதந்திரத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டவரான றீகனே இவ்வாறு ஒரு கட்டுப்பாட்டைக் கொண்டுவர விரும்புகிறாரானால் அங்குள்ள இளைஞர்கள் நிலைமையை நாம் யூகித்துக் கொள்ளலாம்.

எதிலும் ஓரளவே தாராளக் கொள்கை இருக்க வேண்டும். ஒரு திட்டம்எவ்வளவு வருமானம் தருவதாய் இருந்தபோதும் நாட்டின் தேசிய சீர்கேட்டுக்கு வடிகாலாய் அமையக்கூடியதெனக் கருவப்படுமானால் அங்கே கட்டுப்பாடு அவசியமாகின்றது.

## ஆனி உத்திரம்

# சிதம்பர தரிசனம்

மனிதப்பிறவியால் அடையத்தக்க பெரும் பயன் பேரானந்தப் பெருவாழ்வடைதலேயாகும். ஒருமனிதன் நன்னெறியில் வாழ்ந்து தன்பெரும் முயற்சியினால் திருவருட்டுணையைப் பெற்று சிவானந்தப் பெருவாழ்வை அடைதல் அருமை என்பதால் பிறப்பால், தரிசனத்தால், இறப்பால் கூட சிவானந்தப் பெருவாழ்வடையும் வாய்ப்பினை சிவபெருமான் நியமித்தருளியுள்ளார். இம்மூன்றுக்கும் மூன்று தலங் இவற்றில் திருவாரூர் பிறக்க முத்திதரும் தலமாகவும் காசு இறக்கமுத்தி தரும் தலமாகும். சிதம்பர தலம் தரிசிக்க மித்திதரும் சிதம்பர தரிசனம் சுலபமானதும் பெருமையானதுமாகும்.

தலைவியின் தரிசனம் தலைவனின் இருதயத்தில், காதலியின் தரிசனம் காதலன் உள்ளத்தில், அன்பரின் தரிசனம் அன்புடையார் இதயத்தில், அடியார்களின் தரிசனம் ஆண்டவன் இருதயத்தில் ஆண்டவன் தெரிசனம் பூலோகத்தின் இருதயத்தானமாகிய சிதம்பரத்தின் விளங்கா நின்ற கனக சபையில். இங்கு ஸ்ரீ நடராசப் பெருமான் தெரிசனம் கண்டால் முத்தி நிச்சயம். முத்திக்கு வித்தான முதல்வர் ஸ்ரீ நடராசப் பெருமான் கண்டு வணங்கி, அன்பூண்டு முத்தியடைந்தோர் அனேகர். தரிசனம் காணத் துடிப்பவர்கள் பல கோடி. காணாது மாயை வலைப்பட்டு அலையும் மக்களை தன் பக்கம் அழைத்து ஆட்கொள்ளச் சிதம்பர தேவன் பலதிரு விளையாடல்கள் செய்கின்றார்.

**ஆ. கனகசபை**

பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறு கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பு அபயகரம், அனல் ஏந்தியகரம் வீசுகரம், உடுக்கை ஏந்தியகரம் சடா பாரம் பாயும் கங்கை (தூக்கிய)குஞ்சித பாதம், முயலகன்மேல் ஊன்றி திருவடி ஆடும் அரவு, எலும்பு மாலை கூத்தாடும் காட்சி தென்திசை நோக்கி ஆடும் பெருமானை நோக்காது மக்கள் கூட்டம் ஐம்புலன்வழிசென்று பஞ்சமா பாவங்களையும் செய்து தென் திசையில் வாழும் காலன் வசப்பட்டு அழிந்து நரகம் செல்கின்றது. இம்மக்களைக் கண்டு கூத்தப்பிரான் உளம்மிரங்கி கையின் உடுக்கையால் ஒலி எழுப்புகின்றார். சப்தம்கேட்டு மக்கள் திரும்பி நின்று பார்த்தால் அபயகரத்தால் அழைப்பார். மக்கள் வந்து குஞ்சித பாதத்தை வணங்கப் பேரின்பம் கிடைக்கும் என்பார். தூக்கிய பாதத்தில், முத்தி உண்டு என்று வீசுரத்தால் காண்பிப்பார். ஆணவமலத்தை வலிகெடச் செய்து தன் ஊன்றிய திருவடியின் கீழ் வைத்திருக்கின்றேன். என்பார். உங்கள் பாவங்களை கங்கை நீரால் கழுவி முத்தி அளிக்கின்றேன். இது சத்தியம் என்று கையில் உள்ள அக்நிசாட்சியாக உறுதி கூறுவது போன்று ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றார்.

கூத்தப்பிரானின் இத் திவ்விய காட்சியை கண்ட நாவுக்கரசர் மனிதப் பிறவி வேண்டுவதே என்கின்றார். ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்கவேண்டும் என்று கேட்டார் காரைக்கால் அம்மையார். ஆகவேநாம் மன்றினுள் ஆடும் காட்சி காண விரும்பாமல் இருக்கலாமா.

தில்லைக் கூத்தனின் திருநடனக்காட்சி கண்டு உய்ய முயலும் வகையில் நம்முன்னோர் தாம் வாழ்ந்த இடத்திலே இருந்தவாறேசிதம்பரவழிபாடு செய்தார்கள். பூசை விரதம் வழிபாடு என்பவற்றோடு கூட்டு வழிபாடாகிய பஜனையிலும் இடம்பெற்ற கிதப்பர வணக்கத்தையும் விசுவாசத்தையும் பெருமதிப்பையும் பழமை வாய்ந்த இப்பஜனைப் பாடல் வலியுறுத்துகின்றது.

நடராஜர் பாட்டே நறும் பாட்டு ஞாலத்தார் பாட்டெல்லாம் வெறும்பாட்டு சிதம்பரப் பாட்டே அருட்பாட்டு ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப் பாட்டு அம்பலப் பாட்டே அருட்பாட்டு, அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு.

# மக்கள் கருத்து

## பேராதனைப் பல்கலைக் கழகமும் தமிழ் மாணவரும்

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 1000 தமிழ் மாணவர் வரையில் படிக்கின்றனரென்று அதன் உபவேந்தர் கூறியுள்ளார் இப்பொழுது இப்பல்கலைக் கழகம் தென்னிலங்கையிலுள்ள மறுபல்கலைக்கழகங்கள் போல் மூடப்பட்டிருக்கிறது. இப்பல்கலைக் கழகம் திறக்கப் பட்டபின் தமிழ்மாணவர் கதியென்ன? சென்ற கலவரத்தின் பின் அங்கு போவதற்கு தமிழ் விரிவுரையாளரும் மாணவரும் அஞ்சினர். பல்கலைக் கழக மானியக்குழுத் தலைவர் போதிய பாதுகாப்பு கொடுப்பதாக வாக்குப்பண்ணினார். இப்படி வாக்குப் பண்ணியும் சில மாணவர் அங்குபோக விரும்பவில்லை. வசதியுள்ளவர்கள் வெளிநாடு சென்றுவிட்டனர். சிலர் மேற்படிப்பு வேண்டாமென்று விட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கம் பாதுகாப்புக்குப் பேராதனையில் ஒரு பொலிஸ் நிலையத்தை ஏற்படுத்தியது, அப்படி ஏற்படுத்தியிருந்தும் சமீபத்தில் நடந்த கலவரத்தில் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரான மாணவர் உயிர்துறந்தார்.

யாழ்ப்பாணத்தில் இடவசதிகள் எற்படுத்தி விஸ்தரிப்பது அவசியம் இதுபற்றி சம்பந்தப்பட்ட மாணவர் மாத்திரம் சிந்தித்தால்போதாது. தமிழ்ச் சமூகமும் விசேடமாக கல்வியோடு சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கவேண்டும். விவசாய பீடத்தை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிப்பதற்கு ஈழநாடு சில ஆலோசனைகள் கூறியுள்ளது. இவற்றைச்செயல்படுத்தும்படி மானியக்குழுவை வற்புறுத்த வேண்டும். பொறியியல்பீடம் மாற்று ஏற்பாடுகள் பற்றி சிந்திக்கவேண்டும். இவ்விஷயத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்லூரி அதிபர்கள் ஈடுபடவேண்டும். காரியம் சித்திக்கும் வரைக்கும் அயராது முயற்சிக்கவேண்டும்.

ச. அம்பிகைபாகன்
மல்லாகம்

இன்று குருகவி மகாலிங்கசிவம் தினம்

## மகாலிங்கசிவ மலர்

(புலவர்மணி காவிய பாடசாலையிற் சேர்ந்து கற்கக் காரணமாயிருந்தவருள் ஒருவரான குருகவி வே. மகாலிங்கசிவத்தின் மறைவின் போது பாடப்பட்டவை. பதினைந்து பாடல்களில் நான்கு பாடல்களே கிடைத்துள்ளன)

மட்டுவிலாம் பூங்கொடியில் மலர்ந்தமலர்
சாதிமலர் மலர்கள் தாழ
மட்டவிழ்ந்து மணங்கமழ்ந்து வயங்கு மலர்
மாணவராம் வண்டு சூழ்ந்து
தொட்டருந்து மினியமலர் மகாலிங்க
சிவமலர்தன் தொடர்பாம் பாசக்
கட்டறுத்துக் கருணைமலர் சிவபெருமான்
கழல்மலர்க்கீழ்க் கலந்த தன்றே.

தண்முகஞ்சேர்ந் தொழுகிவிளை புலம்நிரம்பச்
சமத்துவமாய்ச் சார்வோர் கொள்ள
உண்முகஞ்சேர் அகப்புறமாம் ஒண்பொருளின்
வளம்பெருக்கும் உபகா ரத்தால்
மண்முகஞ்சேர் மகாவலிகங் கைக்கிணையாம்
மகாலிங்க சிவனு ரின்று
விண்முகஞ்சேர்ந் திடுதுயரம் தமிழுலகம்
தாங்கிடுமோ விதியி தாமோ.

பட்டுடையு மிலையாடம் பரநடையு
மில்லைவெளிப் பகட்டு மில்லைப்
பொட்டுமிலைப் புனைவிரலிற் பொன்கணையா
ழியுமில்லை போலி வேடக்
கட்டுமிலைச் செருக்குமில்லை கலைத்தொண்டே
நிலைத்தொண்டாய்க் கருத்துட் கொண்டாய்
சிட்டர்புகழ் மகாலிங்க சிவமேநின்
சிறப்பியல்பு தெரிவார் யாரே.

திறந்தமனம் நிறைந்தகுணம் தெளிந்தமொழி
சிறந்தநடை திருந்து நீதான்
இறந்தனையென் றறைந்தஉரை இலங்கைமுழு
வதும்வெதுப்பி இமயம் சார்ந்த
துறந்தமனத் தொழுந்தகையும் சோகமுழந்
திடச்சென்று சுட்ட தானல்
மறந்தெங்கன் ஆற்றிடுவோம் நின்பிரிவை
மகாலிங்க சிவப்பேர் வள்ளால்.

புலவர் மணி
பெரியதம்பிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத்தனை கந்தன் தீர்த்தோற்சவம்

கொக்குவில் என்னும் இக்கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்ற காங்கேசன்துறை வீதியின் கிழக்குப் புறத்தே யாழ் நகரில் இருந்து 3 கல் தொலைவில் உள்ளதே மாத்தனை என்னும்பதி. இப் பதியின் கண் எழிலுடனும் பொலிவுடனும் மிளிர்கிறது மாத்தனை கந்தன் ஆலயம்.

இவ்வாண்டுடன் சரியாக இரண்டு நூற்றாண்டுகளை இவ்வாலயம் நிறைவு செய்கிறது. 1784ம் ஆண்டில் இவ்வாலயம் முதன்முதல் அமைக்கப்பட்டது. விசயரத்தின முதலியார் தில்லைநாதர் என்பவர் மண்ணும் சுண்ணும்பும் ஓலைக் கீற்றுக்களும் கொண்டு மிகச் சிறிய ஓர் ஆலயமாக இதனை முதலில் அமைத்தார். அக்காலத்தில் இருநேரப் பூசையை விட கந்தபுராண படலம் வாசித்து விளக்குவதே முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது பின்னர் தம்பிப்பிள்ளை முதலியார் (மணியகாறன்) என்பவர் 1907ம் ஆண்டில் மூலஸ்தானம் முதல் அபிஷேக மண்டபம் வரை பெருப்பித்து கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் செய்வித்தார் இக்காலப்பகுதியிலும் புராணபடனம் வாசித்தலே முக்கிய நிகழ்ச்சியாக விளங்கியது.

பின் 1918ம் ஆண்டில் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. இதன்பின்னர் புராண படனங்கள் படிப்பதுடன் பத்து தினங்களுக்கு அலங்கார உற்சவமும் இவ்வாலயத்தில் நடைபெறத் தொடங்கியது.

இவ்வுற்சவங்கள் அக்கால வழக்கப்படி போட்டி மனப்பான்மையில் ஒன்றையொன்று மிஞ்சும் வகையில் வேடிக்கை விளையாட்டுகளுடன் நடைபெற்றுவந்துள்ளதாக அறியப்படுகிறது.

பரிவாரமூர்த்திகள் அவற்றுக்காகிய மண்டபங்கள் பூசகருக்காகிய இருப்பிடம்போன்ற வசதிகள் மேற்கொள்ளப்பட்டபின் 1962ம் ஆண்டில் இடம் பெற்ற கும்பாபிஷேகமும் சித்திர சிற்பவேலைப் பாடுகளுடன் கூடிய மூலஸ்தான தூபி, முகப்பு மண்டபம், தேர்முட்டி போன்றதிருப்பணிகளுடன் ஆலயம் முழுமையாகவே புனருத்தாரணம் செய்யப்பட்டு 1981ம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கு பெருவிழாவும் இவ்வாலயவரலாற்றின் மைல் கற்களாக கணிக்கப்படுகின்றன.

1967இல் கொடியேற்றத்துடன் மஹோற்சவங்கள் நடைபெற்றமையும், 1971 முதல் சித்திரத்தேர் ஊர்ந்துவரும்

- முருகபக்தன் -

திருவழகும், அன்பர் ஒருவர் தனது சொந்தச்செலவிலேயே செய்வித்து அளித்தபுதிய சப்பரத்தில் ஊர்ந்துவரும் காட்சியும், ஆனிஉத்திரத் திருநாளில் தீர்த்த உற்சவம் காண்பதும் இவ்வாலயம் கண்ட இதர சிறப்பம்சங்களாகும்.

நேற்றையதினம் முருகன் சித்திரத்தேரில் பவனிவந்த காட்சி பக்தர்களின் உள்ளங்களில் பேரானந்தத்தை பெருகச்செய்தது. இன்று தீர்த்தோற்சவம் சிறப்பாகநடக்கிறது.

# ஐந்து ஆண்டுக்காதல் சவூதியில் கசந்தது!

## இளம்பெண் இங்கு வாழ்வை முடித்தார்!!

(யாழ்ப்பாணம்)

ஐந்து வருடமாக காதலித்து வந்தார். சவூதி அரேபியாவிற்கு சென்ற பின்னரும் 60 க்கு மேற்பட்ட காதல் கடிதங்கள் எழுதியவர் திடீரென தொடர்பை நிறுத்திக் கொள்' என்று காதலியின் படங்களையும் திருப்பி அனுப்பியதால் மனமுடைந்த காதலியான பாலர் பாடசாலை ஆசிரியை அலரிமர விதையை தின்று தற்கொலை செய்து கொண்டார்.

சங்கானைப்பகுதியிலுள்ள காளையடியைச் சேர்ந்த 28 வயதான ஞானேஸ்வரி பொன்னுத்துரையின் மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ்.மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் மரண விசாரணை நடத்தினர் சட்டவைத்திய அதிகாரிடாக்டர் எஸ். சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை செய்தார்.

இறந்த ஞானேஸ்வரியை 'கற்கண்டு' என செல்லமாக அழைக்கப்படும் அப்பகுதி இளைஞர் ஒருவர் 5 வருடங்களாக காதலித்து வந்தார் என்று விசாரணையில் கூறப்பட்டது.

இறந்தவர் குடும்பத்தினர் வறுமையினால் வாடிவந்தனரென்றும் அவரது காதலனின் குடும்பத்தினர் வசதியாக வயழ்ந்து வந்தனரென்றும் கூறப்பட்டது.

இரண்டு வருடத்திற்கு முன்னர் காதலனான கற்கண்டு சவுதி அரேபியாவிற்கு வேலை பெற்றுசென்றதாகவும், அங்கு போன பின்பும் 50 அல்லது 60 கடிதங்களுக்கு மேல் இறந்தவருக்கு எழுதி வந்தாரென்றும், இதனால், தெருவிலும், வழியிலும், கற்கண்டு' வின் தாயார் இறந்தவரை கண்டபடி பேசிவந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது. இறந்தவர், பேச்சுக்கள் எதனையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து கற்கண்டு' வுடன் கடிதமூலம் தொடர்பு கொண்டுவந்தாரென்றும் கூறப்பட்டது.

திடீரென்று ஒருநாள் சவுதியிலிருந்து கற்கண்டு அனுப்பிய கடிதம், காதலிக்கு கசப்பானது என்றும் அக்கடிதத்தில் 'உன்தொடர்பை நிறுத்திக் கொள். என்று கூறப்பட்டதாகவும், தெரிவிக்கப்பட்டது அக்கடிதத்துடன், இறந்தவரின் படங்களையும் திருப்பி அனுப்பியிருந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் இறந்தவர் மனமுடைந்து தனிமையில் சிந்தித்துக் கொண்டிருந்தாரென்றும், தாயார் வயலுக்கு புல்லுப்பிடுங்கச் சென்ற சமயம், அன்று பாலர் பாடசாலைக்கு செல்லாமல், வீட்டில் அலரி விதையை தின்றாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

வயலால் வந்ததாயார்என்ன என்று கேட்டபோது 'அலரி' என்று மட்டும் கூறிவிட்டு' சைகையால் 'தன்னை ஒன்றும் கேட்கவேண்டா'மென்று தெரிவித்தாராம். இதன்பின் மயக்கமடைந்து விழுந்து விட்டார் என்றும் கூறப்பட்டது. இதன்பின் சங்கானையைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் முதல் உதவி அளித்தபின் அவரின் ஆலோசனையின் பேரில் யாழ். ஆஸ்பததிரிக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார்,

விசாரணையின் பின் [illegible] கொலை எனத்தீர்ப்பளிக்கப் பட்டது. (க)

### வவனியாவில் நடந்த

# கலைக் கண்காட்சியும் சுகாதார விழாவும்

(வவுனியாநிருபர்)
(ரி. விவேகராசா)

கிராமிய எழுச்சிவாரத்தினை முன்னிட்டு வவுனியாவில் சுகாதாரவிழாவும்,கலைக் கண்காட்சியும் அண்மையில் நடந்தேறியது.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ்விழா வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் வவுனியா பதில் அதிபர் திரு. கே. பி. சிறிசேனு தலைமையில் வைபவம் மிகவும் கோலாகலமாக நடந்தேறியது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன சுகாதார விடயங்களுக்கு பொறுப்பான இணைப்பாளர் திரு. ஏ. ஜெயரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

விழாவுக்கு சிறப்புவிருந்தினர்களாக ஜி. ரி. சற்உதவி திட்ட முகாமையாளர் திரு ஜோகான்ஸ்கினப், வவுனியா பிரதேசகல்விப் பணிப்பாளர் திரு சி. பொ. சிவபாதம், வவுனியா உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. பி. கமலநாதன், வவுனியா மன்னர் மாவட்ட தாய்சேய் மருத்துவ அதிகாரிடாக்டர் திருமதி எஸ். மாணிக்கராஜா ஆகியோர் கலந்து விழாவினை சிறப்பித்தனர்.

வவுனியா பிரதேசகல்விப் பணிப்பாளர் பிரிவுபாடசாலைகளுக்கிடையிலான கலை நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு விழாவில் வைத்து பரிசில்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் சிறந்தமுறையில் பராமரிக்கப்பட்ட குழாய்க் கிணறுகள், நல்லமுறையில் மலகூடங்கள் அமைத்து பாவிக்கும் குடியிருப்பாளர்களுக்கும், சித்திரப்போட்டிகளில் வெற்றியடைந்தவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் அனுசரணையுடன் வவுனியாவில் 315 குழாய்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1000 மலங்கூடங்களும் இந்த நிறுவனத்தினல் வவுனியாவில் நிறுவப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

### மடுமாதா ஆலய உற்சவத்தில்

# சென்ஜோன் அன்புலன்ஸ் சேவைக்கு பாராட்டு

(பண்டத்தரிப்பு

பிரசித்திபெற்ற மடுமாதா தேவாலயத்தின் ஜூலை உற்சவத்தில், சுமார் ஒரு லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டனர். சென்யோன் அம்புலன்ஸ் முதலுதவி சிகிச்சை முகாம் கடந்த ஜூன் 23ம் திகதி அமைக்கப்பட்டு, நேற்று முன்தினம் வரை தனது சேவையை வழங்கியது.

யாழ்.மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமையில் பதினைந்து பேர்இந்த முகாமில் இருந்து இரவு பகலாகக் கடமையாற்றினர்கள்.

வீதி ஒழுங்கு, பாதுகாப்பு கடமைகள் போன்றவைகளையும் இவர்கள் மிக கச்சிதமாகச் செய்து முடித்தனர்.

டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி மேற்பார்வையில், பதினைந்து பேர் கொண்ட குழுவினர் ஆற்றிய பணி குறிந்து திருப்தியும் பாராட்டுகளும் தெரிவிக்கப் பட்டுள்ளன.

மன்னர் அரசங்க அதிபர் திரு. ஜெயா செந்தில்நாதன், வவனியா சுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் கே. கனகசபை, பேராயர் எல்.ஆர் அன்ரனி, ஆலயபரிபாலகர் கே. பி. தேவராஜா அடிகளார் ஆகியோர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி, மற்றும் பதினைந்து பேரும் செய்த சேவையைக்குறிப் பேட்டில் வெகுவாகப் பாராட்டி எழுதியுள்ளனர்.

இவர்கள் ஆற்றிய சேவையினல்,ஆலய உற்சவங்களில் வவனியா ஆஸ்பத்திரியில் அரைவாசிக்கு நோயாளர் எண்ணிக்கை குறைந்திருந்தது என்று வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

# இன்று மரண விசாரணை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான வடபிராந்திய போக்கு வரத்துச்சபை இன்ஸ்பெக்டர் எஸ். கனகரத்தினத்தின் மரண விசாரணை இன்று வியாழக்கிழமை தொடர்ந்து நடைபெறும்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான எஸ். நாகராசா முன்னிலையில் இம்மரண விசாரணை நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் கைக்குண்டு வீச்சுக்குப் பலியான பரமேஸ்வரஜயரின் மரண விசாரணையும், நாளை காலை நடைபெறும். (க)

# விசுவமடுவில் இன்று

(விசுவமடு)

விசுவமடு அ. த. க. பாடசாலை மெய்வல்லுநர் போட்டி இன்று பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது. பிரதம அதிதியாகக் கிளிநொச்சி-முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளர் ஜனப் எம்.எம். மன்சூர் கலந்துகொள்வார். புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரா, கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் கே. தியாகராசா, க. ச. நாகராசா,ஜனப் அகமட்கான் (உ. க.), திருமதி கே. கணேசலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், விசுவமடு றெட்பானஇயக்குநர் திரு ஏ. ஜி. எஸ். பாலச்சந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

பாடசாலை அதிபர் திரு. ச. தங்கராசா தலைமையில் நடைபெறும்இவ்வில்லப்போட்டியில் வெற்றிபெறும் இல்லத்திற்கு ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்து அமரரான சி. சுந்தரலிங்கம் ஞாபகக் கேடயத்தை விசுவமடு வாலிபர் திட்டக் கூட்டுறவுச் சங்கம் வழங்கும்.

# இலவச கண் சிகிச்சை

(சுண்டுக்குளி)

அச்சுவேலி லயன்ஸ் கழக ஆதரவுடன் வரும் ஞாயிறு காலை 9 மணிக்கு, அச்சுவேலி கிளினிக்கில் இலவச விசேட கண் சிகிச்சை அளிக்கப்படும். கண் வைத்திய நிபுணர் கலாநிதி எஸ். அருணசலம் இச் சிகிச்சையை அளிப்பார். இதில் அச்சுவேலி கோவிற்பற்றிலுள்ளவர்கள் இந்த இலவச கண் பரிசோதனையில் பங்குபற்றலாம் என அச்சுவேலி லயன்ஸ் கழக தலைவர் திரு. கே. வி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

# முத்துமாரியம்மன் போற்றிப் பத்து

நீராகி வெப்பொழிக்கும் நிழலே போற்றி
நிறைமாணில் நிறையாகும் நிறையே போற்றி
ஊராகி யூரவர்க்கா முறவே போற்றி
ஊழூழிக் கெட்டாத வூழே போற்றி
ஏராகி யேற்றபொலத் தெழிலாய் போற்றி
ஏசற்ற காட்சியருக் கெளியாய் போற்றி
சீராகிச் சீர்மிகுக்குஞ் சீரே போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

காடுசா ளாயவுயர் கவினே போற்றி
காவல்காத் தவராயர்க் களித்தாய் போற்றி
நீடுகா ளெல்லையின்றி நின்ருய் போற்றி
நீதிநெறி நின்றிலங்கும் நிதியே போற்றி
கூடுமா தவத்தவர்க்காங் கூர்ப்பே போற்றி
குலவியுளங் கொள்ளைகொழுங் குமரே போற்றி
தேடுகா ளாயநலந் திகழ்வாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி

விடுவிடெனும் வெம்பகைகள் வெல்வாய் போற்றி
வீரமொடு கல்விசெல்வந் தருவாய் போற்றி
கிடுகிடென மாமலைகள் கிழிப்பாய் போற்றி
கீதமிசை பாடிவருங் கிளியே போற்றி
சுடுசுடெனுஞ் சூலத்தாற் சுடுவாய் போற்றி
சுடர்வாளை வீசியறஞ் சூழ்வாய் போற்றி
திடுதிடெனத் தேவர்பயந் தீர்ப்பாய் போற்றி
தேவிமுத்து மாரியே போற்றி போற்றி.

--க. தங்கமாமயிலோன்

திருநெல்வேலி முத்துமாரியம்பாள் தீர்த்தோற்சவம் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மொழித் தேர்ச்சிபெற்றும் சம்பள உயர்வு இல்லை!"

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்ட மலேரியா தடுப்பு இயக்க வெளிக்கள உதவியாளர்களில் பலர் அரசகரும மொழித் தேர்ச்சிப் பரீட்சையில் உரிய சித்தியைப் பெற்றும் தமக்கு இதுவரை நிறுத்திவைக்கப்பட்ட வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிரந்தரம் ஆகியன வழங்கபடவில்லை என்று பிரதேச அபிவிருத்தி, தமிழ் மொழி அமுலாக்கல் அமைச்சர் திரு. செ. இராசதுரையிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக இந்த ஊழியர்கள் கையொப்பமிட்டு திரு. இராசதுரைக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

தாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் அரசகரும மொழி தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியெய்தி சுமார் இரு வருடகாலமாகியும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் தங்களது வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிரந்தரம், பதவி ஊர்ஜிதம் ஆகியன இன்றும் வழங்கப்படவில்லை என்றும், இது பற்றி பல தடவைகள் மலேரியா தடுப்பு இயக்க தலைமைப் பீடத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் எவ்வித நிவாரணமும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய நடவடிக்கையை மேற் கொண்டு விரைவில் தங்களது வருடாந்த சம்பள உயர்வு, பதவி நிறுத்தம் ஆகியன கிடைக்க ஆவன செய்து தருமாறும் இம் மகஜரில் அமைச்சர் இராசதுரையிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

பனம் பொருள் அபிவிருத்தி சபையின் ஆதரவில் பனம் பொருள் உற்பத்தி பயிற்சி வகுப்பொன்றை வலி மேற்கு பிரிவில் விரைவில் நடத்துவதற்கான ஒழுங்குகளை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் மேற்கொண்டுள்ளார்.

## லயன்ஸ் கழக வருடாந்தக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும், இம் மாதம் எட்டாம் திகதி பகல் யாழ்ப்பாணம் பாம்கோர்ட் விடுதியில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்திற்கு 'லயன்' டாக்டர் அரியம் நல்லையாவும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள்.

(மா)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை தற்காலிக ஆசிரியர் சங்க பொதுக் கூட்டம் இம் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெறும்.

(ப)

# செய்தித் தணிக்கை

அவசரகாலச்சட்டம் 14 (1) விதிகளுக்கு அமைய பின்வரும் விஷயங்களை பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு முன்னர் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெறவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

- பயங்கரவாதத்துடன் தொடர்புடைய வன்செயல் பற்றிய நடவடிக்கைகள்.
- கொள்ளை மற்றும் அரசாங்க தனியார் சொத்துகளுக்கு சேதம் விளைவித்தல் — தாக்குவோர்— ஆயுதம் தாங்கியவர்களாக இருந்தால்.
- பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகள் அல்லது பயங்கரவாத நடவடிக்கைகள் பற்றிய விசாரணைகள்.
- கொழும்பில் இஸ்ரேல் நலன்காப்புப் பிரிவு ஏற்படுத்துவதற்கும் அல்லது பாதுகாப்புச் சேவை மற்றும் பொலிஸ் பயிற்சிக்காக எவரிடமாவது உதவி கேட்டலுக்கு எதிரான ஆட்சேபங்கள்.
- தேசிய ஒற்றுமையும் சட்டத்தையும் அல்லது சமுகத்திற்குத் தேவையான விநியோகம், சேவைகள் போன்றவற்றை பாதிக்கக்கூடிய விஷயங்கள்.


முடிவு திகதி பின்போடப்பட்டது

இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி

1-ம் பரிசு ரூபா 500-00
2-ம் பரிசு ரூபா 300-00

★ அமரர் இரசிகமணி கனக செந்திநாதன் அவர்களின் நினைவாக யாழ். இலக்கிய வட்டமும் 'ஈழநாடு'ம் இணைந்து நடத்தும் இக் குறுநாவல் போட்டியில் எழுத்தாளர்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.

★ ஆக்கங்கள் தமது சொந்தப் படைப்புக்கள் என உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

★ தாளின் ஒருபக்கத்தில் மட்டும் (புல்ஸ்காப்) 30 முதல் 80 பக்கங்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

★ உறையின் இடது மேல் மூலையில் 'இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டி' எனக் குறிப்பிடவும்.

எழுத்தாளர்கள் தங்கள் குறுநாவலை 15-8-84 திகதிவரை அனுப்பலாம்.

★ அனுப்பவேண்டிய முகவரி:

இரசிகமணி குறுநாவல் போட்டி
ஈழநாடு வாரமலர்,
த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.


# இன்றைய பலன்

மாதம்— ஆனி
திகதி— 21 (5-7-1984)
வாரம்— வியாழன்
திதி— ஸப்தமி மாலை 6-55 வரை
நக்ஷத்திரம்— உத்தரம் பகல் 12—01ன் மேல் அத்தம்.

மேடம்: இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப்படும் வீட்டில் வைத்தியச் செலவு அதிகரிக்கலாம் நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதம் தோன்றக்கூடும் உணர்ச்சிவசப்படாதிருக்கவும்:

இடபம்: கடந்துபோன சம்பவம் ஒன்று குறித்து கவலைகள் அதிகமாகும் பலவழிகளிலும் பணம் செலவாவதற்கு இடமுண்டு சிறியதவறுக்குக்கூட பெரியதண்டனை கிடைக்கலாம் மனத்திடம்வேண்டும்.

மிதுனம்: தற்பெருமைமூலம் தடுமாற்றம் ஏற்படும் கண்துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும் பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையை பேணி நடக்கவும்

கடகம்: கனிவான நினைவுகளில் இன்று ஆனந்தமாக மிதந்துசெல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும் வாகனம் செலுத்துபவர்கள் மக்களின் ஆதரவைப் பெறுவர்.

சிங்கம்: இதயக்கமலம் இன்பத்தால் மலரும் இல்லத்தில் பிணைப்புகள் இறுகும் கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் கற்றதனுல் பயனும் கிடைக்கும்.

கன்னி: திகைக்கவைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம் அரசினரின் ஆத்திரப் பார்வையும் உங்கள் பக்கம் திரும்பமுடியும் கோஷ்டிச் சண்டையில் மாட்டிக்கொள்ளாது இருக்கவும்.

துலாம்: குடும்பவழியால் மனதிற்கு நிம்மதிபிறக்கும் நீண்டநாள் பூமிப்பிணக்குச் சமரசமாக முடியும் காதல் விவகாரங்களுக்கும் இடம் உண்டு சிறப்பானதினம்.

விருச்சிகம்: திரைமறைவில் சதித்திட்டம் உருவாகும் அடுத்துக்கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர் கடற்தொழிலாளர்கள் கவனம் செலுத்தவும் சிலருக்கு நூதன ரோகம் தென்படலாம்.

தனுசு: இன்று முன்னணியில் நிற்பீர்கள் நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம் தெய்வ நம்பிக்கை மேலோங்கும் குறிக்கோளில் வெற்றி கிடைக்கும் லட்சியவாதிகளுக்கு பொன்னுள்.

மகரம்: இதயங்கள் இணைவதற்கு இன்று நல்லநாள் அபிப்பிராய பேதங்கள் மறையும் பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர் பந்துக்கள் ஆதரவுபெருகும் குடும்பத்தில் அமைதி நிலவும்.

கும்பம்: இன்று அதிக ஆதாயம் கிடைக்கும் புதுத்தொழில் முறைகளை மனம் நாடும் நீண்ட பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

மீனம்: எதிர்பாராத செலவினங்களினுல் பாதிக்கப்படுவீர்கள். கடன் வாங்கவும் நேரிடலாம் சமீபத்தில் நடந்து முடிந்த சம்பவமொன்று மனதிற்கு வேதனையைத் தரலாம் தொழிலிலும்தொல்லைஉண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## மாவையில் முதலுதவி சிகிச்சை முகாம்

[பண்டத்தரிப்பு]

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு உற்சவ நாட்களில் திரளும் பெரும் தொகையான பக்தர்களின் நலனை முன்னிட்டு சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் முதலுதவிச் சிகிச்சை முகாம் ஆலய வீதியில் நிறுவப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் யாழ் மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி மேற்கொண்டுள்ளார்.

## யாருடையது

யாழ் 127 ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த கந்தையா முத்துலிங்கம் என்பவரின் அடையாள அட்டையை திரு. அ. அருள் என்பவரும், திரு. சின்னையா கனகரத்தினம் என்பவரின் அடையாள அட்டையை ஒரு அன்பரும், திரு. செல்லையா சபாரத்தினம் மகேந்திரனின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை திரு பி ஸ்ரீஇராசஇராசேந்திரனும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## இன்றைய வானொலியில்

காலை

| | |
|---|---|
| 5-30 | நாதாஞ்சலி |
| 5-35 | பஜன் |
| 5-50 | பக்திப் பாடல்கள் |
| 6-00 | சைவநற்சிந்தனை |
| 6-05 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 6-10 | அறநெறி ஆரம் |
| 6-25 | நிகழ்ச்சி முன்னேட்டம் |
| 6-30 | செய்திகள் |
| 6-40 | அறிவிப்புகள் |
| 6-50 | மெல்லிசைப் பாடல் |
| 6-55 | போதிமாதவனின் போதனைகள்—த.கனகரத்தினம் |
| 7-00 | திருவூஞ்சல் - கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் பேரில் பாடப்பட்டவை. |
| 7-30 | மாகாணச் செய்திகள் |
| 7-35 | இசையமுதம் |
| 8-05 | வாத்தியமஞ்சரி |
| 8-15 | முஸ்லிம் நிகழ்ச்சி |
| 8-45 | காலைஒலிபரப்புமுடிவு |

மாலை

| | |
|---|---|
| 6-30 | செய்திகள் |
| 6-10 | அறிவிப்புகள் |
| 6-15 | திருவருள்நெறி |
| 6-30 | உரைச்சித்திரம்— ''வாழ்க்கையின் எல்லை - கோப்பாய் S. சிவம் |

இரவு

| | |
|---|---|
| 7-00 | இளஞ்சுடர் |
| 7-30 | உலகச் செய்திகள் |
| 7-40 | நாட்டுப் பாடல் |
| 7-45 | சங்கீதாமிர்தம் (மறு ஒலிபரப்பு) |
| 8-00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 9-00 | செய்திகள் |
| 9-10 | செய்தியின் பின்னணியில் |
| 9-15 | அறிவிப்புகள் - பக்திப் பாடல் |
| 9-30 | பாட்டு—M.S. சுப்புலக்ஷமி |
| 10-30 | ஒலிபரப்பு முடிவு. |


யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி
நீங்கள் வெளிநாடு செல்ல வேண்டுமா?
உங்கள் பிரயாணச் சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்து கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் செல்வதற்கான விசா, பயணச்சீட்டுக்கள் மற்றும் சகல ஏற்பாடுகளும் மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.
குறிப்பு: டென்மார்க் செல்வதற்கான இருவழி பயணச்சீட்டும், விசா மற்றும் சகல ஏற்பாடுகளும் ரூபா 30,000/-க்கு செய்து கொடுக்கப்படும். மறுவழி பயணச்சீட்டுக்கான பணம் (RETURN TICKET) திருப்பிக் கொடுக்கப்படும்.
Cross Travel Services (Pte) Ltd.
STAGE II, MODEL MARKET
No, 5, 1st FLOOR
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No: 22040, 22065. TELEX No. 2207 (C. T. S) CE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டைத்தரிப்பில் புத்தகக் கண்காட்சி

(பண்டைத்தரிப்பு)

பண்டைத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தின் மேல் மாடியில் சோவியத் புத்தகக் கண்காட்சி வரும் சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது. டாக்டர் சுகந்தன் இன்ஞசித்தம்பி புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி -சரோஜாதேவி
**இருவர் உள்ளம்**

**ஹரன்** (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00
Chery Chase
MODERN PROBLEMS
(Adults Only)

**மனோகரா** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்- ஜெயலலிதா
**தாய்க்குத் தலைமகன்**
(புதிய பிரதி)

**சாந்தி** (யாழ். நகர்
10-30, 2-30, 6-30
ஜெமினி - ஜெய்சங்கர்
**அன்புக்கோர் அண்ணன்**
(புதிய பிரதி)

**வின்சர்** (யாழ் நகர்
தினசரி 10-30, 2-30, 6-30
கடைசி வாரம்
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
**ஒளிவிளக்கு**
(புதிய வண்ணப் பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30, 7-00
FRIDAY THE 13th
(adults only)
6-7-84 முதல்
**கவரிமான்**

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
ரவிச்சந்திரன் லதா
**சொர்க்கத்தில் திருமணம்**
(கலர்) புதிய பிரதி


Now Showing
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்
**ரீகல்** (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Burt Lancaster,
TWILIGHT'S LAST GLEAMING
பயங்கரவாதிகள் அமெரிக்க ஜனாதிபதியை பணயக் கைதியாக்கிஅவர்உயிருக்கே ஆபத்தை உண்டாக்கும் திகிலூட்டும் சண்டைப் படம்

(3—8)
**லிடோ** யாழ். நகர்
தினசரி 10-30, 2-30, 4-45, 7-00
FORCE FIVE
International Karate
(Color)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 7-00
Sean Connery,
as James Bond 007
YOU ONLY LIVE TWICE

லயன்ஸ் கழகங்களின் மாவட்ட வருடாந்த மகாநாடு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்திற்கு சிறந்த நிதி நிர்வாகத்திற்கான அகில இலங்கை விருது வழங்கப்பட்டது.

இம்மகாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட தேசிய பந்தோபஸ்து அமைச்சரின் பாரியார் திருமதி லலித் அத்துலத் முதலியிடமிருந்து வட்டுக்கோட்டை



லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உபதலைவர் டாக்டர் ரி. பகீரதன் இதற்கான விருதை பெற்றுக்கொள்வதை படத்தில் காணலாம். லயன்ஸ் மாவட்ட ஆளுநர் டாக்டர் பாமி இஸ்மாயிலும் படத்தில் காணப்படுகின்றார். (படம்: பண்டத்தரிப்பு நிருபர்)



## சமாதான நீதவான்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுண்டுக்குளியைச் சேர்ந்த திரு. விசுவலிங்கம் திலகராயர், யாழ்ப்பாணம் நீதி, நிர்வாக மாவட்டத்திற்கு சமாதான நீதவானாக யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், கொழும்பு பிறவுண் தொகுதி கம்பனிகளில் 42 வருடம் டகமையாற்றி நிர்வாக உத்தியோகத்தராக ஓய்வுபெற்றார். இவர் கொழும்பில் வசித்த காலத்தில் பொரல்ல- நாரஹென்பிட்டி சமாதானசபையின் அங்கத்தவராகவும், சமூக சேவையாளராகவும் கொழும்பு மாவட்ட சமாதான நீதவானாகவும் பணிபுரிந்தவராவார். (க)

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | 'ஹியர்ஸ்பூமர்' |
| 6-25 | சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-40 | கேலிச்சித்திரம் (ஆங்கிலம்) |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | வாத்திய விருந்து |
| 7-45 | சிங்கள நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 9-05 | 'வின்ட்ஸ் ஒவ்வோர்' |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-50 | 'வின்ட்ஸ் ஒவ்வோர்' தொடர்ச்சி. |
| 10-30 | உலகச் செய்திகள் |
| 10-35 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## பஸ்பிரயாணத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொண்டார்.

கலாசார உத்தியோகத்தர் திரு செ. எதிர்மன்னசிங்கம் வரவேற்புரை, நிகழ்த்தினார். சுவாமி ஜீவானந்தாஜீ

## மானி இந்துவுக்கு ஆங்கில மொழி ஆய்வு கூடம்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சகல வசதிகளும் அடங்கிய ஆங்கில மொழிக்கான ஆய்வு கூடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆய்வு கூடஅறையை கல்லூரியின் பழைய மாணவரான சமாதான நீதவான்மா கிரிதரன் தம[illegible] சொந்த செலவில் புனரமை[illegible]துக் கொடுத்துள்ளார். அடு[illegible] தவணை ஆரம்பத்தில் [illegible] ஆங்கில மொழி ஆய்வு [illegible] இயங்க ஆரம்பிக்கு[illegible] கல்லூரி அதிபர் தி.ரு எ[illegible] மகேசவேலு தெரிவித்த[illegible]

ஆசியுரையுடன் [illegible] இளைஞர் மன் [illegible] வர் திரு. ம. சிவ[illegible] ஓய்வு பெற்ற அ[illegible] க. கணபதிப்பிள்ளை, [illegible] சுபா சக்கரவர்த்தி, [illegible] கலாநிதி வி. ஜெகந[illegible] ஆகியோர் ஆய்வுரை, நிகழ[illegible]தினர்.

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

இ.பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல 84 அ-பிரிவுகள் 524,532)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற ஸ்பென்சர் செல்லையா கைம்பெண் நல்லம்மா என்பவரின் மரணசாதனத்தின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்

செல்லையா துரைசிங்கம்
9, மவுண்டர் அவெனியூ,
கல்கிசை

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல த /3584

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில்தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளைபதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 13ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றாக தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**கு. ம,லசிங்கம்,**
பதிவாளர்

1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது. 655

## கேள்விப் பத்திரம்

### வெற்றுச்சாக்கு, கழிவு பொருட்கள் விற்பனவு

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தில்

1. வெற்றுச்சாக்குகள் (10,000)
2. கழிவு சீனி
3. கழிவு சக்கரை
4. கழிவு தேங்காய்

ஆகியன கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு. ரூ, 500/- வைப்புப்பணமாக தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரம் 10-07-84 செவ்வாய்க் கிழமை பி. பகல் 4மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் பொது முகாமையாளர் தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மூலையில் வெற்றுச் சாக்கு, கழிவு பொருட்களுக்கான கேள்விப்பத்திரம்' எனக் குறிப்பிடல்வேண்டும். கேள்விப்பத்திரம் 10-07-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு சங்க உபசபையினர் முன்னிலையில் திறக்கப்படும்.

பதில் பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை
ப. நோ. கூ. சங்கம்
தெல்லிப்பழை
84-07-03 704

## யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்

★ வருடாந்த பொதுக்கூட்டம் 21-7-84 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது சமூகமளிக்கவும்,

★ புதிதாக சேர விரும்பும் பழைய மாணவர்கள் உடன் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

★ பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 13-7-84க்கு முன்னர் செயலாளருடன் எழுத்து மூலம் அறிவிக்கவும். இதன்பின்னர் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

செ. இ. இராகுலன்,
செயலாளர்,
532, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22633 (673)

## நீர்ப்பாசனத் திணைக்களம்

கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திர சபையின் தலைவரினால் கீழ்காணும் வேலைக்குக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரம் அனுப்புவதற்கு நீர்ப்பாசனத்திணைக்களத்தில் ரூபா 300,000/-க்கு அல்லது அதற்குக் கூடிய தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட அல்லது வேறு அரச திணைக்களங்களில் ரூபா 1,000,000/-க்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே தகுதியுடையோராவர்.

### வேலை விபரம்

**இரணைமடுக்குள வெள்ள அழிவுத் திருத்த வேலை**

கேள்விப் பத்திரங்கள் 09.07.84 தொடக்கம் 23.7.84 வரை வழங்கப்படும். கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்த வேண்டும். இயந்திர உரிமையாளரிடமிருந்து அவரது வேலைக்காக தனது இயந்திரத்தைத் தரச் சம்மதமெனவும் அப்படித் தரக்கூடிய இயந்திரத்தின் விபரங்களையும் கொண்ட கடிதத்தினை கேள்விப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும்போது சமர்ப்பிக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1984-ம் ஆண்டு ஆடி மாதம் 27-ம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் நீர்ப்பாசன பொறியியலாளர் கிளிநொச்சி அவர்களிடமிருந்து வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**அ. இராசலிங்கம்**
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கிளிநொச்சி.
29.06.1984 (668)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நற்சான்றிதழ்:

## புதிய நடைமுறைபற்றி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்லும் இளைஞர்களுக்கும், வெளிநாடுகளில் வேலை பெற்றுக் கொடுக்கும் ஏஜென்சிகளுக்கும், வட பகுதியைப் பொறுத்தவரை பொலிஸ் நற்சாட்சிப்பத்திரம் வழங்குவதில் சில விதிமுறைகள் கடைப்பிடிக்க வேண்டியிருப்பதாக யாழ் பொலிஸ் தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி திரு. ரஞ்சித்சில்வா தெரிவித்துள்ளார்.

திரு. ரஞ்சித்சில்வா இது பற்றி மேலும் தெரிவிக்கையில்; வெளிநாடுகளில் வேலை வாய்ப்புத் தேடிச் செல்லும் இளைஞர்களுக்கு பொலிசாரால் நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்க சுமார் 3 மாதம் செல்லுமென்றும் இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு சம்பந்தப்பட்ட இளைஞர்கள் தம்மீது குறை நினைக்கவேண்டாம். என்றும் சொன்னார்.

மேற்படி நற்சாட்சிப் பத்திரம் பெறும் இளைஞர்கள் குற்றமற்றவர்களா என்று அறிவதற்காகவே அவர்களின் கைவிரலடையாளங்கள் எடுக்கப்பட்டு கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பப்படுவதாகவும், அங்குபரிசீலனை செய்யப்பட்டு அறிக்கை வந்த பின்னரே பொலிஸ் நற்சாட்சிப்பத்திரம் வழங்கப்படவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, இதனை நடைமுறைப்படுத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். (மா)

### ...யாருடையது?

...லைச் சேர்ந்த செல்வி ...சா என்பர் யாழ். ...வீதியில் பஸ் நிலை... அருகில் ஒரு ... பணத்துடன் ஒரு ... கண்டு எடுதது ஈழ...லுவலகத்தில் ஒப்...துள்ளார். உரியவர் ...லக நேரத்தில் வந்து ...பெற்றுக்கொள்ளவும்.

# இப்படியும் நடக்கிறது

இந்துபோட் இராசரத்தினம் நூற்றாண்டு விழாத் தொடர்பான ஆரம்பக் கூட்டம், நேற்றுப் பகல், யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் உரையாற்றிய மேற்படி மகாவித்தியாலய அதிபர் திரு. ம. முத்துலிங்கம்; மகாவித்தியாலய மாணவர், மாணவிகளின் அவலநிலையை இவ்வாறு படம்பிடித்துக் காட்டினார்;

''இச் சைவச் சிறுர் இல்ல மாணவி ஒருத்தி ஜி. ஸி. ஈ. பரீட்சையில் திறமைச்சித்தியடைந்தும் உயர்கல்விக்கு நான் எடுத்த எல்லா முயற்சிகளும் கானல்நீராகிவிட்டது. விளையாட்டில் பலருக்கு இங்கு திறமை உண்டு. ஆனால் போட்டிகளில் கலந்துகொள்ள சீருடையோ, சப்பாத்துகளோ இல்லை'' என்று பச்சையாகக் கூறிவிட்டு;

''இந்துபோட் இராசரத்தினம் குடும்பத்தினர் இன்று வழங்கிய மதியஉணவைப்போல இனிமேல் எப்பொழுது வயிறு நிறைய சாப்பிடும் சந்தர்ப்பம் இந்தச் சைவச் சிறுர்களுக்கு கிடைக்குமோ தெரியாது...'' என்று ஏக்கப்பெருமூச்சுவிட்டு கண்கலங்கியபோது... அங்கு கூடியிருந்தவர்களின் நெஞ்சங்கள் எரிமலையாகக் கொதித்து கண்ணீரும் பெருக்கெடுத்தோடிற்று!

-ஊடுருவி

## மாவைக் கந்தன் ஆலய உற்சவம் ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமைந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தான மஹோற்சவங்கள் நேற்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமானது. இதனையொட்டி மாவிட்டபுரப் பிரதேசத்தில் கலை நிகழ்ச்சிகள் நடத்தல், ஒலிபெருக்கிபாவித்தல் தடைசெய்யப்பட்டு அமைதிப் பிரதேசமாக தேவஸ்தான தர்மகர்த்தாவும், பிரதம குருவுமான மகாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

இம்மாதம் 8ம் திகதி திருநடன விழாவும், 13ம் திகதி புதிதாக அமைக்கப்பட்ட மஞ்சத்தில் முருகன் பவனியும், 23ம் திகதி திருக்கார்த்திகை விழாவும், 26ம் திகதி பெரிய சப்பரத் திருவிழாவும், 27ம் திகதி பஞ்சமகாரதோற்சவமும், 28ம் திகதி கீரிமலையில் ஆடி அமாவாசைத் தீர்த்த விழாவும் நடாத்தஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி உற்சவத்தில் முதற் கட்டமாக கொடியேற்றத்திற்கு துவஜ புடவை சமர்ப்பிக்கும் வைபவம் கொல்லங்கலட்டி முதலியாப்பிள்ளையால் நிறுவப்பட்ட துவஜா ரோஹன மடத்தில் நடைபெற்றது. பல காலத்தின் பின் இம்முறை மேற்படி மடத்தில் இருந்து துவஜ புடவை சம்பிரதாய முறைப்படி சர்வ மங்கல வாத்திய சகிதம் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. திரு. வ. சரவணமுத்து மேற்படி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

பக்தர்கள் யாவரும் கோவில் கிழக்கு வாசலூடாகக் கோவிலுக்குள் செல்லுமாறு வேண்டப்படுகின்றனர். கோவில் பந்தோபஸ்து பாதுகாப்பு முதலியனவற்றை முன்வைத்து மேற்குபுற வாசல் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது,

விசேட தொண்டர் குழு அமைக்கப்பட்டுள்ளதுடன். திருவிழாவின் போது எவரும் எதுவித கலைநிகழ்ச்சிகளும் கோவில் எல்லைக்குள் நடாத்தக்கூடாது என்றும் அங்கிகாரமின்றி எவராவது கலை நிகழ்ச்சிகள் நடாத்த முற்படின் அவர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் ஆதினகர்த்தா அறிவித்துள்ளார்,

## மரணஅறிவித்தல்

### ரஞ்சன் கந்தையா

ரஞ்சன் கந்தையா உதவி பொலிஸ் (S.I) பரிசோதகர் சிலாபம் அகாலமரணமானுர். ஈமைக்கிரிகை அராலி தெற்கில் அன்னாரின் ''அன்பு'' இல்லத்தில் 05-07-84 இன்று காலை 10-00 மணிக்கு நடைபெறும். ஓய்வு பெற்ற பொலிஸ் பரிசோதகர் (I. P) வி. க.சுந்தையா திருமதி தெய்வானை கந்தையாவின் மகனும் செல்வி இந்திரா, ரஞ்சனி, உமா, திரு. மனேரஞ்சிதன் ஆகியோரின் சகோதரனும் திருமதி சாந்தியின் கணவரும் செல்வி மகிழ்தினியின் தகப்பனுமாவார். 709

## மரணஅறிவித்தல்

### திருமதி சின்னம்மா சுப்பிரமணியம்

கட்டுடை திருமதி சின்னம்மா சுப்பிரமணியம் காலமானுர், இவர் காலம்சென்ற P. W. D. ஓவசியர் M. சுப்பிரமணியம் அவர்களின் பாரியாரும், துரைரத்தினம் (இளைப்பாறிய S. P), காலம்சென்ற இராசரத்தினம் (இளைப்பாறிய P. W. D. ஓவசியர்), இராசமலர், அரியமலர், சோமசுந்தரம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்), காலம்சென்ற இராஜேந்திரம் (இளைப்பாறிய நீர்ப்பாசன உதவிஅத்தியட்சகர்), டாக்டர் அரியரத்தினம்(R. M. P, நக்காவத்தை), காலம்சென்ற இரத்தினராஜா(இளைப்பாறியநீர்ப்பாசன T.A.) ஆகியோரின் அருமைத்தாயாரும், ஈனிட், சாந்தாதேவி, காலம்சென்ற செல்லப்பா (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்), சிவசிதம்பரம் (இளைப்பாறிய நீர்ப்பாசனபொறியியலாளர்), செல்வராணி, சிவபாக்கியம், இரத்தினேஸ்வரி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். ஈமைக்கிரியைகள் 82, கண்டி வீதி சுண்டிக்குளி இல்லத்தில் 5-7-84 வியாழக்கிழமை இன்று பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும். 693

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரவல்லி பொன்னுசுவாமி

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி சுந்தரவல்லி பொன்னுசுவாமி காலமானுர். இவர் வைத்திலிங்கம் பொன்னுசுவாமியின் (Retired Interpreter Mudaliyar) அன்பு மனைவியும், பத்மாவதி (அவுஸ்திரேலியா), இராமநாதன் (மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), சத்தியவதி (Kuala Lumpur), சத்தியநாதன் (Accountant De Beers Botswana), திலகவதி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), இந்திரநாதன் (Bank of Ceylon, Jaffna), டாக்டர் தருமவதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், முருகையா (இலங்கை வங்கி, கொழும்பு), விமலாதேவி, தேவராஜா (Barrister at Law Kuala Lumpur), இந்துமதி, கணபதிப்பிள்ளை (Govt. Science School Nigeria), கருணாதேவி, ஜெகதீஸ்வரன் (கணக்காளர் டொரண்டோ) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (Secretary Urban Council) இன் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 6-ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

''சுந்தர கிரி'', 66, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. 705

## புனரமைப்பு

[பண்டத்தரிப்பு]

கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்பு பொதுக் கூட்டம் சங்க மண்டபத்தில் வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற போது தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு தலைவர்: திரு. சு, சிவகுமார் செயலாளர்:- திரு சதாசிவம் பொருளாளர்;- திரு மகாலிங்கம் செயற்குழு உறுப்பினராக எட்டுப் பேர் தெரிவாகினர்கள்.

## சைவச்சிறுர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரையில், பெரியார் இராசரத்தினம் இறக்கும்போது 91 பிள்ளைகள் சைவச்சிறுர் இல்லத்தில் இருந்தார்கள் என்றும் ஒரு பிள்ளைக்கு அப்பொழுது அதாவது 75-ம் அண்டுவரை மாதம் 25 ரூபா தர்மப் பணமாக அரசால் வழங்கப்பட்டு வந்ததென்றும்குறிப்பிட்டார்,

75ம் ஆண்டுக்குப்பின்னர்ஒரு பிள்ளைக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபா விதம் அரசாங்கம் வழங்கி வந்த போதிலும், 82ம் ஆண்டுக்குப்பின்னர் இதுவரை எதுவித நிதிஉதவியும் அரசாங்கம் வழங்கவில்லை என்று சொன்ன அவர் இப்பொழுது 253 ஆண் பெண் பிள்ளைகளை எப்படிப் பராமரிக்க முடியும் என்று கேட்டார்.

இந்த 253 பிள்ளைகளில் 6 வயது தொடக்கம் 18 வயது வரையுள்ள ஆண்-பெண் பிள்ளைகளும்இருக்கிறுர்கள்என்றுர்.

ஒரு பிள்ளைக்கு உணவு, உடுபிடவை, பாடசாலை உபகரணங்கள் உட்பட ஒரு மாதம் 265 ரூபா செலவு செய்யவேண்டிருக்கிறதென்றும், அரசாங்கம்கூட வழங்க வேண்டிய நிதியைத் தராததால் பொது மக்கள் இதற்கு போதியளவு நிதி உதவிவழங்கி இந்தஇல்லத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் திரு. கனகநாயகம் வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் அடுத்துப் பேசிய முத்துத்தம்பி வித்தியாலய அதிபர் திரு. ம. முத்துலிங்கம் சைவச் சிறுர் இல்லத்திலிருந்து இவ்வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் கஷ்டங்களை எடுத்துச் சொன்னபோது சபையில்இருந்தவர்கள் கண்களைத் துடைத்துக்கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஜி.சி.ஈ.யில் திறமைச் சித்தியடைந்த சைவச்சிறுர் இல்ல மாணவியின் உயர் கல்விக்கு வழிசமைக்க தாம் பட்ட கஷ்டங்கள்கூட இறுதியில் பயனளிக்காமல் போனது குறித்தும் அதிபர் முத்துலிங்கம் ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

அவர் குறிப்பிட்ட மாணவி அச்சுவேலியைச் சேர்ந்தவர் என்றும் இவர் யாருமற்றவர் என்றும் அவர் சொன்னுர். பிள்ளைகளுக்குபோதியபோஷாக்கான உணவு வசதி இல்லாததை வகுப்புகளுக்கு வரும் அந்த விடுதி மாணவர்களைக் கொண்டே தாம் அறியக்கூடியதாக இருப்பதாக அதிபர் தெரிவித்தார்.

இந்த சைவச்சிறுர் இல்லத்தை எந்த நோக்கத்துடன் நடத்த பெரியார் இந்துபோட் இராசரத்தினம் போன்றவர்கள் விருப்பினுர்களோ, அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற, அவர்களுக்கு ஆதரவளிக்க நல்லெண்ணமும் நல்ல மனப்பாங்கும் கொண்ட குழு இச்சைவச் சிறுர் இல்லத்தைப் பொறுப்பேற்க வேண்டும் என்றுவலியுறுத்திச்சொன்னுர்.

மானிப்பாய் தொகுதி முன்னுள் எம்.பி.திரு.வி. தருமலிங்கம், யாழ். இந்துக் கல்லூரி முன்னுள் அதிபரும் 'ஈழநாடு' ஆசிரியருமான திரு. ந. சபாரத்தினம், இளைப்பாறிய வித்தியாதிபதி திரு. தி. மாணிக்கவாசகர், இளைப்பாறிய அதிபர் திரு இ கந்தையா, திரு. நா சோதிநாதன் ஆகியோரும் இந்துபோட் இராசரத்தினம் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

## ரூபா 16 கோடி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மானியக் கோரிக்கையை சமர்பித்து அவர் உரையாற்றுகையில்; இலங்கையின் கடல் கண்காணிப்பு வலயத்தில் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் கடற்படைக்கப்பல்கள் மிகச் சிறியவையாக இருப்பதினுல் அவசரமாக புதிய கப்பல்கள் தேவைப்படுகிறதென்றும் அதற்காகவே இந்தப்பிரேரணை சமர்பிக்கபடுகிறது என்றும் தெரிவித்தார்.

இப்பிரேரணைமீது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு வக்ஷமன் ஜெயக்கொடி உரையாற்றுகையில் ''தற்போது அமைக்கப்பட்டிருக்கும் கடல் கண்காணிப்பு வலயம் திறம்பட செயல்படவில்லையென்றும் குற்றம்சாட்டினுர்'.

## விபத்தில்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர், அங்கு உறவினர் ஒருவரின் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அதிவேகமாகச் சென்றதாகவும் அராலிச்சந்தி வளைவில் தூக்கி வீசப்பட்டு வயலுக்குள் விழுந்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

வயலில் கிடந்த அவரை வட்டு. தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் தூக்கி வந்து பின்னர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்த்தனராம். நேற்று அதிகாலை 2-15 மணிக்கு அவர் இறந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

மரண விசாரணை நடாத்திய அதிகாரி கே. கேசவன் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்,

பதில் சட்டவைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி என். சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை செய்தார். ச. சிவானந்தன், வா. சுப்பிரமணியம் ஆகியோர் சாட்சியமளித்தனர். (மா)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஜூலை மாதம் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org